Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 194 | உள்ளூர் - 13.07.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 194 | வெளியூர் - 14.07.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**12 ராசிகளுக்கும் வெற்றிலை பரிகாரம்!** | **ஆயுத வாகன நிகாமில் 1,213 வேலைவாய்ப்புகள்!** | **வாக்காளர் பட்டியலில் பெயர் : புதிய விதிகள்!** | **திரும்பினால் அரசியல் வாழ்வு மீண்டும்: எடப்பாடி!**

# பொது நிகழ்ச்சியில் ஈரான் உச்ச தலைவர் மொஜ்தாபா?



ஈரான், ஜூலை. 13–

ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமெனியின் மகனும், முக்கிய மத மற்றும் அரசியல் பிரமுகருமான மொஜ்தாபா காமெனி, வரும் ஜூலை23 தேதி மாலை 5.00 மணிக்கு டெஹ்ரானில் கமேனீக்கு நினைவேந்தல் நடைபெற இருக்கிறது.

இந்த பொது நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அண்மைக் காலமாக அவர் பொதுமக்கள் முன்னிலையில் அதிகம் தோன்றாத நிலையில், இந்த நிகழ்ச்சி முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவரது பங்கேற்பு குறித்து அரசியல் வட்டாரங்களிலும், சர்வதேச ஊடகங்களிலும் கவனம் அதிகரித்துள்ளது. ஈரானின் தற்போதைய அரசியல் சூழல் மற்றும் பிராந்திய பதற்றங்களுக்கு மத்தியில் நடைபெறும் இந்த நிகழ்வு பல்வேறு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், அவர் நிகழ்ச்சியில் பேசுவாரா அல்லது வெறும் பங்கேற்பாளராக மட்டுமே இருப்பாரா என்பது குறித்து அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகவில்லை. மொஜ்தாபா காமெனியின் இந்த பொது தோற்றம், ஈரானின் எதிர்கால அரசியல் நிலவரம் குறித்து புதிய விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வை உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்.

# அமெரிக்க செனட்டர் லிண்ட்சே கிரஹாம் மரணம்: அதிபர் டிரம்ப் இரங்கல்!



வாஷிங்டன், ஜூலை. 13–

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் மிக நெருங்கிய ஆதரவாளரும், குடியரசுக் கட்சியின் மூத்த செனட்டருமான லிண்ட்சே கிரஹாம் வாஷிங்டனில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார். உக்ரைன் நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டுவிட்டு கடந்த சனிக்கிழமை திரும்பிய நிலையில் இரவு இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை அவரது அலுவலகம் அதிகாரப்பூர்வமாக இந்தத் தகவலை வெளியிட்டது. கிரஹாமின் திடீர் மறைவு குறித்து மருத்துவப் பரிசோதகரின் முதற்கட்ட அறிக்கையின்படி, மரணத்திற்கு இதயத்தின் முக்கிய தமனியான பெருநாடியில் ஏற்பட்ட வெடிப்பு தான் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது மிக நெருங்கிய நண்பரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார். தனது Truth Social தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:–

“நான் அறிந்த மிகச் சிறந்த மனிதர்களில் மற்றும் செனட்டர்களில் சிறந்தவரான லிண்ட்சே கிரஹாம் நம்மை விட்டு பிரிந்துவிட்டார். அவர் எப்போதும் நாட்டின் நலனுக்காக உழைத்த ஒரு உண்மையான அமெரிக்க தேசபக்தர்” என கூறியுள்ளார்.

கிரஹாமின் மறைவையொட்டி அமெரிக்கா முழுவதும் தேசியக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிட அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் உக்ரைன் அதிபர் வொலோடிமிர் ஜெலென்ஸ்கி, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகிய உலகத் தலைவர்களும், கிரஹாம் தங்களது நாடுகளுக்குச் செய்த பெரும் ஆதரவை நினைவு கூர்ந்து தங்களது இரங்கல்களைத் தெரிவித்துள்ளனர். முன்னாள் விமானப்படை வழக்கறிஞரான லிண்ட்சே கிரஹாம், அமெரிக்க வெளியுறவுக் கொள்கை களில் மிக முக்கியப் பங்காற்றினார். ஆரம்ப காலங்களில் டொனால்ட் டிரம்ப்பை விமர்சித்து வந்தாலும், பின்னாட்களில் டிரம்பின் மிக முக்கியமான அரசியல் ஆலோசகராகவும், பாராளுமன்றத்தில் அவரது கொள்கைகளைத் தீவிரமாக ஆதரிக்கும் தூணாகவும் மாறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய ரயில்வேயில் அதிர்ச்சி

# காலியான ரயில்வே கையிருப்பு! ரூ.104 கோடி மதிப்பிலான பொருட்கள் மாயம்

## கடும் கண்காணிப்பு?







புதுடெல்லி, ஜூலை. 13–

இந்திய ரயில்வேயின் ஏசி பெட்டிகளில் பயணிகளுக்காக வழங்கப்படும் போர்வை, பெட்ஷீட், துண்டு, தலையணை, தலையணை உறை உள்ளிட்ட பொருட்கள் பெருமளவில் மாயமாகியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தகவல் அறியும் உரிமை (ஆர்டிஐ) சட்டத்தின் மூலம் வெளியான தகவலின்படி, 2022 ஜனவரி முதல் 2026 மே வரை நாடு முழுவதும் 1.27 கோடி பொருட்கள் காணாமல் போயுள்ளன. இதனால் இந்திய ரயில்வேக்கு ரூ.104.51 கோடி நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

காணாமல் போன பொருட்களில் 46.54 லட்சம் துண்டுகள், 41.13 லட்சம் பெட்ஷீட்கள், 23.59 லட்சம் தலையணை உறைகள், 12.95 லட்சம் போர்வைகள் மற்றும் 2.76 லட்சம் தலையணைகள் இடம்பெற்றுள்ளன. பிகானெர், ராஞ்சி, டெல்லி ரயில்வே பிரிவுகளில் அதிகளவில் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. குறிப்பாக பிகானெர் பிரிவில் மட்டும் 25.76 லட்சம் பொருட்கள் மாயமாகியுள்ளன.

பயணிகள் பயன்படுத்துவதற்காக வழங்கப்படும் இந்தப் பொருட்களை சொந்த பயன்பாட்டிற்காக எடுத்துச் செல்வதே இழப்புக்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, பயணம் நிறைவடைவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பே பயன்படுத்திய பொருட்களை ரயில்வே ஊழியர்களிடம் கட்டாயம் ஒப்படைக்க வேண்டும் என்ற நடைமுறையை ரயில்வே நிர்வாகம் அமல்படுத்தியுள்ளது. மேலும், ரயில்வே சொத்துகளை அபகரிப்பது சட்டப்படி கடுமையான குற்றம் என்பதால், பயணிகள் பொது சொத்துகளை பாதுகாக்கும் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.



பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்கள் இந்தியாவின் உலகளாவிய செல்வாக்கை அதிகரித்துள்ளதாக பாஜக தெரிவித்துள்ளது. பல நாடுகளுடன் வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, தொழில்நுட்பம், கல்வி மற்றும் எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இந்தியாவுக்கான நேரடி வெளிநாட்டு முதலீடு அதிகரிக்கவும், இந்தியர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகள் விரிவடையவும் இந்தப் பயணங்கள் உதவியதாக பாஜக கூறியுள்ளது. மேலும், உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்து, பல்வேறு சர்வதேச அமைப்புகளில் இந்தியாவின் பங்கு வலுப்பெற்றுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜூன் முதல் டிசம்பர் வரை ஜல்லிகட்டு நடத்த அனுமதி இல்லை: உயர்நீதிமன்ற மதுரைக்கிளை!



மதுரை, ஜூலை. 13–

ஜூன் முதல் டிசம்பர் வரை ஜல்லிகட்டு நடத்த அரசு அனுமதி வழங்கக்கூடாது என்று உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது. உச்சநீதிமன்ற உத்தரவை கடைபிடிப்பதை மாவட்ட ஆட்சியர்கள், எஸ்.பி.க்கள் உறுதி செய்ய வேண்டும்.

# ‘ஜுராசிக் பார்க்’ நடிகர் சாம் நீல் காலமானார்..!!



ஜுராசிக் பார்க் படத்தில் DR.ஆலன் கிராண்ட் கதாபாத்திரத்தில் நடித்து பிரபலமான நடிகர் சாம் நீல் (78) காலமானார்.100க்கும் மேற்பட்ட படங்கள், தொடர்களில் நடித்திருந்த நீல், கடந்த ஏப்ரல் மாதம் புற்றுநோயில் இருந்து முழுவதும் மீண்டிருந்தார். எதிர்பாராத விதமாக, திடீரென அவரது உயிர் பிரிந்ததாக அவரது குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

# ரேஷன் கடைகளில் விற்கப்படும் மளிகை பொருட்களுக்கு ஆன்லைன் டெண்டர்!



சென்னை, ஜூலை. 13–

தமிழ்நாட்டில் உள்ள 34,908 ரேஷன் கடைகள் மூலம் 2 கோடியே 15 லட்சத்திற்கும் அதிகமான ரேஷன் கார்டுதாரர்கள் மாதம் தோறும் பயன்பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு, அரிசி, கோதுமை ஆகியவை இலவசமாகவும், சர்க்கரை, துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவை குறைந்த விலையிலும் வழங்கப்பட்டு வருகிறது.

இதுபோக, மஞ்சள் பொடி, சேமியா, பெருங்காயத்தூள், உப்பு, வெந்தயம், சீரகம், குளியல் சோப்பு, சலவை சோப்பு உள்ளிட்ட மளிகை பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆனால், இந்த மளிகை பொருட்கள் எல்லாம் கட்டாயத்தின் பேரில் பொதுமக்களிடம் விற்பனை செய்யப்படுவதாக புகார்கள் எழுந்து வந்தன. இதனால், பல நேரங்களில் ரேஷன் கடை ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு வந்தது.

கடந்த ஆட்சி காலத்தில், இந்த மளிகை பொருட்கள் எல்லாம் ‘கூட்டு கொள்முதல் குழு’ மூலம் வெளிப்படைத்தன்மை இல்லாமல் வாங்கப்பட்டது. இதன் மூலம் அதிகார மட்டத்தில் உள்ள சில உயர் அதிகாரிகளுடன், ஆளும் தரப்புக்கு நெருக்கமான நிழல் மனிதர்களுமே ஆதாயம் அடைந்தனர் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த நிலையில், மளிகை பொருட்கள் கொள்முதலுக்கு, ஆன்லைன் மூலம் டெண்டர் விடப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. அரசின் இந்த அறிவிப்புக்கு தமிழ்நாடு அரசு ரேஷன் கடை பணியாளர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

# தொடங்கிய பொறியியல் கலந்தாய்வு!



சென்னை, ஜூலை. 13–

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பிற்கான மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு தொடங்கியது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழுள்ள 450–க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கை கலந்தாய்வு தொடங்கியது.

முதற்கட்டமாக மாற்றுத்திறனாளி, விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெறுகிறது. அரசு பள்ளி மாணவர்களு க்கான 7.5% இடஒதுக்கீட்டில் சிறப்பு பிரிவினர் பங்கேற்கின்றனர். 38 இடங்கள் உள்ள விளையாட்டு வீரர்கள் பிரிவில் 504 பேர் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர்.

முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகளுக்கான 150 இடங்களுக்கு 14 பேர் பங்கேற்கின்றனர். பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு வரும் 20–ந்தேதி முதல் 30–ந்தேதி வரை 40 நாட்கள் நடைபெறுகிறது.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 13.07.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 29-ம் தேதி

# ‘எல் நினோ’ அச்சுறுத்தல்!



பசிபிக் கடல் வெப்பமாதலின் தாக்கம் இந்தியக் கடலுக்கு... மீன்வளத்தை காக்க முன்கூட்டியே நடவடிக்கை அவசியம்

பசிபிக் பெருங்கடலில் தீவிரமடைந்து வரும் ‘எல் நினோ’ வானிலை நிகழ்வு, இந்தியக் கடல் பகுதிகளில் மீன்வளத்துக்கு புதிய சவாலாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக, தமிழகம் மற்றும் கேரள கடற்கரைகளில் அதிகளவில் கிடைக்கும் மத்தி மீன் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படலாம் என்று மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது. இது மீனவர்கள் மட்டுமின்றி, மீன் வணிகம் மற்றும் பொதுமக்களின் உணவுப் பாதுகாப்புக்கும் கவலை அளிக்கும் செய்தியாகும்.

பூமத்திய ரேகையை ஒட்டிய பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வழக்கத்தை விட அதிகமாக வெப்பமடைவதே ‘எல் நினோ’ எனப்படுகிறது. அங்கு உருவாகும் வெப்ப மாற்றங்களை ‘வாக்கர் சுழற்சி’ எனப்படும் வளிமண்டல இயக்கம் இந்தியப் பெருங்கடலுக்கு கொண்டு வருகிறது. இதன் விளைவாக கடல் நீரோட்டம், காற்றின் திசை, கடல் வெப்பநிலை ஆகியவை மாறி, மீன்களின் இனப்பெருக்கம் மற்றும் உணவு சங்கிலி பாதிக்கப்படுகிறது.

ஆய்வாளர்களின் கணிப்பின்படி, தற்போது பசிபிக் கடலில் உருவாகும் எல் நினோவின் தாக்கம் 2027 ஏப்ரல்மே மாதங்களில் இந்தியக் கடலில் தீவிரமாக வெளிப்படும். குறிப்பாக மத்தி மீன் கூட்டங்கள் இடம்பெயர்வது, உற்பத்தி குறைவது போன்ற விளைவுகள் ஏற்படலாம். இதன் காரணமாக மீன் விலை உயர்வதுடன், மீனவர்களின் வருமானமும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

எனவே, மீன்வளத் துறை, கடலியல் ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அரசுகள் இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மீனவர்களுக்கு முன்கூட்டிய வானிலை மற்றும் கடல் நிலை தகவல்களை வழங்குதல், மாற்று வாழ்வாதாரத் திட்டங்களை உருவாக்குதல், மீன்வள வளங்களை அறிவியல் அடிப்படையில் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் காலத்தின் கட்டாயமாகும். இயற்கையின் மாற்றங்களை முன்கூட்டியே புரிந்து செயல்பட்டால்தான், கடலையும், மீன்வளத்தையும், மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க முடியும்.

# ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் தீவிரம்!



வாஷிங்டன், ஜூலை. 13–

வார இறுதியில் ஹார்முஸ் நீரிணையில் கன்டெய்னர் கப்பல் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் அது தீப்பிடித்து எரிந்ததோடு, அதில் இருந்த ஒரு பணியாளரும் காணாமல் போனார். இதனை தொடர்ந்து, அமெரிக்கா ஈரான் மீது பல கட்டத் தாக்குதல்களை நடத்தியது.

இதற்கு பதிலடியாக, ஈரான் பஹ்ரைன், குவைத், கத்தார், ஜோர்டான் மற்றும் ஓமான் ஆகிய நாடுகள் மீது தாக்குதல்களை நடத்தியது. நீரிணையின் மறுபுறத்தில் உள்ள ஓமான் நாட்டை, கப்பல் போக்குவரத்தை நிர்வகிப்பதில் ஒத்துழைக்குமாறு தெஹ்ரான் வலியுறுத்தி வருகிறது. முக்கியத்துவம் வாய்ந்த நீரிணையில், சுதந்திரமாக பயணிக்கும் வர்த்தக கப்பல்களை தாக்கும் ஈரானின் திறனை குறைப்பதே தங்களின் நோக்கம் என்று அமெரிக்க இராணுவம் கூறியது. ஜூலை. 13 (ஞாயிற்றுக்கிழமை) இரவு மற்றும் (திங்கட்கிழமை) அதிகாலை ஈரானில் நடந்த மூன்றாவது கட்ட தாக்குதல்களுக்கு பிறகு இந்த அறிக்கை வெளியானது.

ஈரானிய அரசு ஊடகங்கள் இந்த சமீபத்திய தாக்குதல்களை ஒப்புக்கொண்டன, ஆனால் நீரிணைக்கு அருகில் உள்ள பகுதிகளில் உயிரிழப்புகளோ அல்லது பொதுமக்களின் உள்கட்டமைப்புகளுக்கு சேதமோ ஏற்படவில்லை என்று தெரிவித்தன. ஏதேனும் இராணுவ இலக்குகள் தாக்கப்பட்டனவா என்பது குறித்து தெளிவாக தெரியவில்லை. சில தாக்குதல்கள் ஏவுகணை மற்றும் வான் பாதுகாப்பு அமைப்புகளையும், துணை இராணுவப் புரட்சிக் காவலர் படகுகளையும் குறிவைத்ததாக ஒரு அமெரிக்க அதிகாரி கூறினார். இராணுவ நடவடிக்கைகள் குறித்து பகிரங்கமாக விவாதிக்க அவருக்கு அதிகாரம் இல்லாததால், அந்த அதிகாரி பெயர் குறிப்பிட விரும்பாமல் பேசினார்.

# தவெக அரசுக்கு எம்எல்ஏக்களை களவாட வேண்டிய அவசியமில்லை - துரை வைகோ!



திருச்சி, ஜூலை. 13–

திருச்சியில் மதிமுக எம்பி துரை வைகோ செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* சட்டசபை தேர்தலில் தொகுதிக்கு ரூ.20 கோடி வரை செலவு செய்தும் திமுக தோற்றுவிட்டது.
* திமுக முன்னாள் அமைச்சர்களின் தொகுதிகளில் ரூ.80 கோடி முதல் ரூ.100 கோடி வரை செலவு செய்யப்பட்டது.
* மதிமுக உட்பட கூட்டணிக் கட்சிகளின் தொகுதிகளிலும் ரூ.20 கோடி வரை செலவு செய்யப்பட்டது.
* பல ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்தும் திமுகவால் வெற்றிபெற முடியவில்லை.
* மதிமுக எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கிவிட்டனர்.
* திமுக – அதிமுக தான் குதிரைபேரம் நடத்துகின்றன. தவெக ஒருபோதும் குதிரைபேரத்தில் ஈடுபடவில்லை.
* திமுக – அதிமுக – பாஜக சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சி நடந்தது.
* முதலமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசுக்கு எம்எல்ஏக்களை களவாட வேண்டிய அவசியமில்லை.
* திமுக, அதிமுக கூட்டணி முயற்சிகளால் தான் எம்எல்ஏக்கள், அதிமுக முக்கிய நிர்வாகிகள் ராஜினாமா செய்கிறார்கள்.
* திமுக, அதிமுக தலைமை மீதான நம்பிக்கையின்மையால் தான் கட்சியில் இருந்து வெளியேறுகின்றனர்.
* திமுக – தவெக ஒரே அணியில் இணைவது ஏற்புடையதல்ல.
* தவெக தனது கொள்கை எதிரி பாஜக தான் என வெளிப்படையாக அறிவித்து விட்டது.
* பாஜக – அதிமுக கூட்டணியுடன் இணைந்து ஆட்சியமைக்க முற்பட்ட திமுக எப்படி பாஜகவை எதிர்க்கும்.
* பரந்தூர் ஏர்போர்ட் திட்டத்தை அரசு கைவிட்டு, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத இடத்தில் அமைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நில அபகரிப்பு புகார்: தா.மோ.அன்பரசன் மீது வழக்குப்பதிவு!



சென்னை, ஜூலை. 13–

தன்னுடைய சொத்தை திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கடந்த 2 ஆண்டுகளாக சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வைத்துள்ளதாக சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவன உரிமையாளர் ராஜேஷ் சோமசுந்தரம் முதல்–அமைச்சரின் தனிப்பிரிவில் புகார் அளித்து இருந்தார். அதில் கூறியிருப்பதாவது;

2024–ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலின்போது பரங்கிமலையில் தேர்தல் பணிமனைக்காக கொடுத்த 5,500 சதுர அடி நிலத்தை திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் திருப்பி தர மறுக்கிறார். அன்பரசனின் உதவியாளர் என்ற பெயரில் ஒருவர் வந்து கேட்டதன் பேரில் அந்த இடம் தரப்பட்டது. இதற்கென கட்டாயப்படுத்தி 6 மாத குத்தகை ஒப்பந்தமும் ஏற்படுத்தினர். ஆனால், குத்தகை காலம் முடிந்தும் இடத்தை காலி செய்து தரவில்லை. 2 ஆண்டுகளாக வாடகையும் தரவில்லை. குத்தகை ஒப்பந்தம் சிலரது பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்களை தொடர்பு கொள்ள முயற்சித்த போது, அவர்கள் போலியாக முகவரி கொடுத்துள்ளது தெரியவந்துள்ளது. தற்போது சட்டவிரோதமாக என்னுடைய நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர். வாடகை கூட தராமல் இழுத்தடிக்கப்பட்ட நிலையில், கடந்த ஜூன் 19ம் தேதி முன்னாள் அமைச்சர் அன்பரசன் என்னை சந்தித்தார். அப்போது, ஒருவாரத்தில் அந்த நிலத்தை தன்னிடம் ஒப்படைக்குமாறும், பணம் கொடுத்து விடுவதாகவும் கூறினார். ஆனால் நிலத்தை விற்க எனக்கு விருப்பமில்லை. எனக்கு அந்த நிலம் தேவைப்படுகிறது என்று உறுதியாக தெரிவித்து விட்டேன். ஒரு வாரம் கழித்து பேசுவதாக கூறிச் சென்றவர், பிறகு எந்த பதிலும் கூறவில்லை. பல முறை தொடர்பு கொள்ள முயற்சித்தும், தொடர்பு கொள்ள முடியவில்லை. எனது நிலத்தை மீட்டுத்தர வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டு இருந்தார்.

இந்த நிலையில், நில அபகரிப்பு புகார் தொடர்பாக திமுக முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், அவரது உதவியாளர் ஜெய்சங்கர் மற்றும் பல்லாவரம் தாசில்தார் ஆறுமுகம் ஆகியோர் மீது பரங்கிமலை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மேம்படுத்தப்பட்ட ஐ.ஆர்.சி.டி.சி. இணையதளம் - விரைவில் பயன்பாட்டிற்கு வருகிறது!




புதுடெல்லி, ஜூலை. 13–

பயணிகள் சிரமம் இல்லாமல் எளிதில் முன்பதிவு செய்யும் வகையில் பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ள ஐ.ஆர்.சி.டி.சி., இணையதளம் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது. இதுகுறித்து, தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:– பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் ஐ.ஆர்.சி.டி.சி. இணைதளம் மேம்படுத்தப்பட்டு தற்போது தயாராக உள்ளன. இதற்கான, முன்னோட்ட பணிகளும் நடந்து வருகின்றன. டிக்கெட் முன்பதிவை எளிமையாகவும், தடையின்றியும் செய்வதை நோக்கமாகக் கொண்டு 4 முக்கிய மேம்பாட்டு அம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளன. முன்பதிவு செய்யும்போது தேவையற்ற கேப்ட்சாக்களை நீக்குதல். தேவையற்ற பாப்–அப்களை அகற்றுதல், ஒளிரும் கிராபிக்ஸ், கவனச்சிதறல்களை ஏற்படுத்தும் அம்சங்கள் நீக்கப்படும். அனைத்து வகுப்புகளிலும் இருக்கை கிடைப்பது ஒரே பார்வையில் பார்க்கலாம். இவ்வாறாக டிக்கெட் பதிவு செய்யும் முறைகள் எளிமைப்படுத்தி இருப்பது பயணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# மதுபான விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 27 பேர் பலி!




பாங்காக், ஜூலை. 13–

பாங்காக்கில் உள்ள ஒரு மதுபான விடுதியில் இன்று (திங்கள்கிழமை) அதிகாலை ஏற்பட்ட பெரும் தீ விபத்தில், 27 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதலில் மீட்புப் பணியில் ஈடுபட்டவர்கள் இணையத்தில் பகிர்ந்த காணொளியில், தாய்லாந்து தலைநகரின் வடக்குப் பகுதியில் உள்ள ‘நா லட்ப்ராவ்’ மதுபான விடுதியின் முன் வாசலில் இருந்து பெரும் தீ கொழுந்து விட்டு எரிவதும், புகை மண்டலங்கள் வெளியேறுவதும் தெரிகிறது.

அடர்த்தியான கருப்புப் புகை வானத்தில் பரவ, மக்கள் தப்பி ஓட முயற்சிப்பதும் காணப்படுகிறது. நள்ளிரவு வாக்கில் தீ விபத்து குறித்து தகவல் கிடைத்ததாக மீட்புப் படையினர் தெரிவித்தனர்.

தாய்லாந்து பிரதமர் அனுதின் சார்ன்விரகுல் சம்பவ இடத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில், 27 பேர் உயிரிழந்ததாகவும், காயமடைந்தவர்களில் பலர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் கூறினார். தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அங்கு நிகழ்ச்சி நடத்திக்கொண்டிருந்த ஒரு இசைக்கலைஞர், மின்சாரம் துண்டிக்கப்படுவதற்கு முன்பு மேடைக்கு அருகில் இருந்த ஒரு சர்க்யூட் பிரேக்கரில் இருந்து புகை வெளியேறுவதை கண்டதாகவும், பின்னர் ஒரு வெடிச்சத்தம் கேட்டதாகவும், அடர்த்தியான புகை அந்த இடத்தை விரைவாக நிரப்பியதாகவும் தன்னிடம் கூறியதாக அனுதின் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் பலர் மதுபான விடுதியின் பின்புறத்தில் உள்ள கழிவறைகளில் கண்டெடுக்கப்பட்டதாக அனுதின் மேலும் கூறினார்.

# வங்காளதேசத்தில் வெள்ளம், நிலச்சரிவு; 51 பேர் பலி!



டாக்கா, ஜூலை. 13–


இந்தியாவின் அண்டை நாடான வங்காளதேசத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. அந்நாட்டின் சிட்டகாங்க் மாகாணத்தின் 7 மாவட்டங்களில் கனமழை கொட்டித்தீர்த்து வருகிறது.

கனமழையால் அம்மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. அதேவேளை, கனமழை தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

கனமழை தொடர்ச்சியாக ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி இதுவரை பலர் உயிரிழந்துள்ளனர் என வங்காளதேச அரசு தெரிவித்துள்ளது.

இதன்படி, மொத்தம் 64 மாவட்டங்களில் உள்ள 7 மாவட்டங்கள் வெள்ளநீரால் சூழப்பட்டு உள்ளன. 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். மொத்த பலி எண்ணிக்கை 51 ஆக உயர்ந்து உள்ளது. இவற்றில் அதிக அளவாக காக்ஸ் பஜார் மாவட்டத்தில் 28 பேர் பலியாகி உள்ளனர். சட்டோகிராம் பகுதியில் 13 பேர், பந்தர்பன் பகுதியில் 6 பேரும் பலியாகி உள்ளனர். இவர்களில் பலர் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள ரோகிங்கியா முஸ்லிம்கள் ஆவர்.

# பழனியில் விடுதிக் கட்டணம் உயர்வு!



பழனி, ஜூலை. 13–

பழனி முருகன் கோயில் நிர்வாகத்திற்கு சொந்தமான தங்கும் விடுதிகளில் கட்டணம் (ஜூலை 13) முதல் உயர்த்தப்பட்டுள்ளது. அறைகளின் வசதிக்கு ஏற்ப ரூ.300 முதல் ரூ.1,500 வரை உயர்த்தப்பட்டுள்ளது.



# 12 ராசிகளின் துயரம் தீர்க்கும் வெற்றிலை பரிகாரம்!



ஜோதிட மரபில் வெற்றிலை மங்களகரமான பொருளாக கருதப்படுகிறது. வெற்றிலையுடன் சில எளிய பொருட்களை வைத்து இஷ்ட தெய்வத்தை மனமுருகி வழிபட்டால் மனக்கவலைகள் நீங்கி, குடும்ப அமைதி, ஆரோக்கியம் மற்றும் செல்வ வளம் பெருகும் என்று ஆன்மிக நம்பிக்கைகள் கூறுகின்றன. ஒவ்வொரு ராசிக்கும் அதற்கேற்ற நாள் மற்றும் பரிகார முறைகள் கூறப்பட்டுள்ளன. எந்த ராசிக்காரர்கள் எந்த நாளில் எப்படி வழிபட வேண்டும்

**மேஷம்:** செவ்வாய்க்கிழமை வெற்றிலையின் மீது மாம்பழம் வைத்து முருகப்பெருமானை வழிபடலாம்.

**ரிஷபம்:** செவ்வாய்க்கிழமை வெற்றிலையுடன் மிளகு வைத்து ராகு பகவானை வழிபடுவது நல்லது.

**மிதுனம்:** புதன்கிழமை வெற்றிலையின் மீது வாழைப்பழம் வைத்து இஷ்ட தெய்வத்தை வணங்கலாம்.

**கடகம்:** வெள்ளிக்கிழமை வெற்றிலையுடன் மாதுளம்பழம் வைத்து காளி தேவியை வழிபடலாம்.

**சிம்மம்:** வியாழக்கிழமை வெற்றிலையில் வாழைப்பழம் வைத்து குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வத்தை வழிபடுவது சிறப்பு.

**கன்னி:** வியாழக்கிழமை வெற்றிலையின் மீது மிளகு வைத்து வழிபட்டால் மனக்கவலைகள் குறையும்.

**துலாம்:** வெள்ளிக்கிழமை வெற்றிலையுடன் கிராம்பு வைத்து இஷ்ட தெய்வத்திற்கு அர்ச்சனை செய்யலாம்.

**விருச்சிகம்:** செவ்வாய்க்கிழமை வெற்றிலையுடன் பேரிச்சம்பழம் வைத்து வழிபடுவது நல்ல பலன் தரும்.

**தனுசு:** வியாழக்கிழமை வெற்றிலையின் மீது கற்கண்டு வைத்து இஷ்ட தெய்வத்தை வணங்கலாம்.

**மகரம்:** சனிக்கிழமை வெற்றிலையுடன் அச்சு வெல்லம் வைத்து காளி தேவியை வழிபடலாம்.

**கும்பம்:** சனிக்கிழமை வெற்றிலையில் பசு நெய் வைத்து காளி தேவியை மனமுருகி வேண்டலாம்.

**மீனம்:** ஞாயிற்றுக்கிழமை வெற்றிலையின் மீது சர்க்கரை வைத்து இஷ்ட தெய்வத்தை வழிபட்டால் உடல் நலம் மற்றும் மன அமைதி கிடைக்கும் என நம்பப்படுகிறது.

ஆன்மிக அறிஞர்களின் கருத்துப்படி, பரிகாரம் என்பது வெறும் சடங்கு அல்ல. மனதூய்மை, இறைநம்பிக்கை, நேர்மையான வாழ்க்கை மற்றும் பிறருக்கு உதவும் மனப்பான்மையுடன் செய்யப்படும் வழிபாடுகளே நல்ல பலனைத் தரும் என்று கூறப்படுகிறது.

**குறிப்பு:** மேலே உள்ள தகவல்கள் பாரம்பரிய ஜோதிட மற்றும் ஆன்மிக நம்பிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டவை. இவை அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டவை அல்ல; தனிநபர் நம்பிக்கையைப் பொறுத்தவை.

# பாம்பன் பழைய தூக்குப்பாலத்தின் ஒரு பகுதி அகற்றம்!



ராமநாதபுரம், ஜூலை. 13–

பாம்பன் கடலில் 1914ல் அமைக்கப்பட்ட பாம்பன் ரயில் பாலத்தின் நடுவில் உள்ள தூக்கு பாலம் பலமிழந்ததால் 2022ல் அதன் வழியாக நடந்த ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதன் பின் புதிய ரயில் பாலம் அமைக்கப்பட்டு 2025 ஏப்., 6ல் ரயில் போக்குவரத்து துவங்கியது.

இதையடுத்து பழைய ரயில் தூக்கு பாலத்தை பராமரிப்பதில் சிக்கல் ஏற்பட்டதால் அகற்ற டெண்டர் விடப் பட்டது. தற்போது தூக்கு பாலத்தை அகற்றும் பணி நடந்து வருகிறது. இந்நிலையில் தற்போது தூக்குப்பாலத்தின் ஒரு பகுதி வெட்டி அகற்றப்பட்டது. இன்னும் சில வாரங்களில் தூக்கு பாலம் முழுவதும் அகற்றப்படும் என ஊழியர்கள் தெரிவித்தனர்.

# வானிலேயே மறையும் மழைத்துளிகள்: வடமேற்குத் தொடர்ச்சி மலையில் நடப்பது என்ன?



தென்மேற்குப் பருவமழையின் போது, வடமேற்குத் தொடர்ச்சி மலைகளில் பெய்யும் மழையில் கால் பகுதி, தரையை தொடுவதற்கு முன்பேநடுவானிலே ஆவியாவதாக சமீபத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மழைத்துளி மூலக்கூறுகளில் உள்ள மிகச்சிறிய வேறுபாடுகளைச் சரிபார்க்கும் ஐசோடோப் பகுப்பாய்வைப் பயன்படுத்தி, காற்றில் எவ்வளவு மழை ஆவியாகிறது என்பதை புனேவில் உள்ள இந்திய வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் கண்டறிந்துள்ளது.

கடந்த 2019ம் ஆண்டு பெய்த பருவமழையை வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்ட நிலையில், தினசரி ஆவியாதல் விகிதம் 4% முதல் 61% வரை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவியாதல், பொருட்களைக் குளிர்விப்பதோடு, மேகங்களின் செயல்பாட்டையும் மாற்றுகிறது என்பது தெரியவந்துள்ளது.

இந்த கண்டுபிடிப்பு இந்தியாவின் ஒட்டுமொத்த பருவமழை சுழற்சியைப் புரிந்துகொள்ளவும், வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் காலநிலை மாதிரிகளைமேலும் துல்லியமாக மாற்றவும் பெரிதும் உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## குதிகால் வெடிப்பா? இந்த இயற்கை முறைகள் போதும்...!



குதிகால் வெடிப்பு மற்றும் வறட்சியை குறைக்க வீட்டிலேயே எளிய இயற்கை ஃபுட் பேக்குகளை பயன்படுத்தலாம்.

**முக்கிய குறிப்புகள்:**

வாழைப்பழம் + தேன் + எலுமிச்சை கலவையை 30 நிமிடம் தடவவும்.

வேகவைத்த முள்ளங்கி மசித்து வாரம் 2 முறை பயன்படுத்தலாம்.

கடலை மாவு + அரிசி மாவு + முல்தானி மெட்டி + பால் கலந்து ஃபுட் பேக் போடலாம்.

கழுவிய பின் தேங்காய் எண்ணெய் அல்லது மாய்ஸ்சரைசர் தடவுவது அவசியம்.

இரவில் சாக்ஸ் அணிவதால் பாதங்களில் ஈரப்பதம் நீடித்து, குதிகால் மென்மையாகும்.

## திரும்பினால் அரசியல் வாழ்வு மீண்டும்: எடப்பாடி!



சேலம், ஜூலை. 13–

சேலத்தில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசும்போது, அ.தி.மு.க.வில் இருந்து த.வெ.க.வுக்கு பிரிந்து சென்றவர்கள் அங்கு எப்படி இருக்கிறார்கள்? என்பது அனைவருக்கும் தெரியும். என்னை எப்போது வேண்டுமானாலும் வந்து சந்திக்கலாம். ஆனால் தி.மு.க. தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் த.வெ.க. தலைவரை அவர்களால் சுலபமாக பார்க்க முடியாது. ஆட்சி, காட்சிகள் மாறும்போது, நம்மிடம் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வருவார்கள். அவ்வாறு வந்தால் அவர்கள் ஜீரோவில் இருந்து தான் அவர்களது அரசியல் பயணம் தொடங்கப்படும்.

தேர்தலில் தி.மு.க. தலைவர் உள்ளிட்ட சில அரசியல் கட்சி தலைவர்கள் வெற்றி பெறமுடியவில்லை. த.வெ.க.தலைவர் விஜய் அவர் மீது நம்பிக்கை இல்லாமல் 2 தொகுதிகளில் போட்டியிட்டார். ஆனால் எடப்பாடி தொகுதியில் நான் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளேன், என்றார்.

பேரறிஞர் அண்ணா, புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் உருவ படங்களை வைத்து த.வெ.க. தலைவர் விஜய் ஊர், ஊராக சென்று மக்களை சந்தித்தார். நமது தலைவ ர்களை வைத்து வெற்றி பெற்றுள்ளதால் அது உண்மையான வெற்றியாக கருத முடியாது. ஜனநாயகன் படத்தயாரிப்பா ளருக்கு டெல்லி சிறப்பு பிரதிநிதியாவும், அவருக்கு ஆலோச கருக்கு தமிழ்நாடு அரசின் ஆலோசகரா கவும் பதவி வழங்கப்பட்டுள்ளது. சொல்லபோனால் முதல்–அமைச்சருக்கு மேக்கப் போடும் நபருக்கும் வரும் நாட்களில் பதவி கொடுப்பார்கள்?. த.வெ.க. ஆட்சிக்கு வந்து 60 நாட்களில் தி.மு.க. ஆட்சியில் இருந்ததுபோல் கொலை, கொள்ளை, போதைப்பொ ருட்கள் நடமாட்டம் அதிகமாக நடந்து வருகிறது. தேர்தலில் வெற்றி பெற மாட்டோம் என நினைத்து ஏராளமான வாக்கு றுதிகளை விஜய் அள்ளி வீசினார். தற்போது நிதியில்லாமல் விழி பதுங்கி நிற்கிறார். த.வெ.க. தனிப்பெரும்பான்மை யுடன் ஆட்சிக்கு வரவில்லை. தி.மு.க. கூட்டணி கட்சிகளின் உதவியுடன் ஆட்சி நடந்து வருகிறது. அவர்கள் எப்போது வேண்டுனாலும் காலை வாறிவிடுவார்கள். அப்போது இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும். எனவே, விரைவில் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல் மற்றும் அதன்பிறகு வரும் தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெறும். எனவே, கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையு டன் இருந்து கட்சி பணியாற்ற வேண்டும்'' என்றார்.

## வேலை வாய்ப்பு

### 1213 பணியிடங்கள்: ஆயுத வாகன நிகாம் லிமிடெட்டில் வேலைவாய்ப்பு!

மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான Armoured Vehicles Nigam Limited (AVNL) நிறுவனத்தில் 1213 Executive மற்றும் Non–Executive பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பணியிடங்கள் ஆவடி (சென்னை), ஜபல்பூர் (மத்தியப் பிரதேசம்), மேடக் (தெலங்கானா), அம்பர்நாத் (மகாராஷ்டிரா) உள்ளிட்ட இடங்களில் உள்ள தொழிற்சாலைகளில் நிரப்பப்பட உள்ளன.

ஆன்லைன் விண்ணப்பப் பதிவு ஜூலை 11, 2026 காலை 10 மணி முதல் தொடங்கியுள்ளது. விண்ணப்பிக்க ஜூலை 25, 2026 இரவு 11.59 மணி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தகுதி, வயது வரம்பு, ஊதியம், விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட முழுமையான விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் அறிந்து, தகுதியானவர்கள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய விவரங்கள்:

நிறுவனம்: Armoured Vehicles Nigam Limited (AVNL)

பணியிடங்கள்: 1213

பணி வகை: Executive & Non–Executive

பணி முறை: ஒப்பந்த அடிப்படை

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்–: https://avnl.co.in/

கடைசி நாள்: 25.07.2026

## த.வெ.க.வை அணைத்தும், அடித்தும் பேசிய அண்ணாமலை!



சென்னை, ஜூலை. 13–

கோவை பொள்ளாட்சியில் 'வீ தி லீடர்ஸ்' அமைப்பின் முதல் மாநாடு, அந்த இயக்கத்தில் தலைவர் அண்ணாமலை தலைமை யில் நடைபெற்றது. இதில் தவெக குறித்து பேசிய அண்ணாமலை,

''இது அரசியல் மாநாடு இல்லை. இன்னொரு கட்சியை திட்ட, இன்னொரு தலைவனை குறை சொல்ல இந்த மாநாடு இல்லை. ஆட்சிக்கு ஒருவர் வந்துள்ளார், அவருக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த மாநாடு இல்லை. இந்த மாநாடு போதையில்லா தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்கை கொண்டு வந்துள்ளது. நிறையபேர் கேட்கிறார்கள், தவெகவை வெளுத்துவிட சொல்லி.


2026–ல் ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் ஓட்டுப்போட்டு இந்த அரசை தேர்ந்தெடுத்துள்ளார்கள். அதற்கு மரியாதை கொடுக்கவேண்டியது நமது கடமை. இவர்கள் யாரும் அனுபவ எம்.எல்.ஏக்கள் கிடையாது. செங்கோட்டை யனைத்தவிர மற்ற அனைவரும் புதிய அமைச்சர்கள். புதியவர்களை தூக்கிப் பிடித்துதான் விடவேண்டுமே தவிர, கீழ அமுத்தக்கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறோம்.

ஆணவத்தோடு இந்த அமைப்பை நாம் ஆரம்பிக்கவில்லை. அதிகாரத்திற்கு வரவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் நாம் இங்கு இல்லை. நல்ல சமுதாயம், நல்ல தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இங்கு இருக்கிறோம். விஜய்யை இனிமேல் சிஎம் சார் எனவே அழைப்போம். அவர் ஒரு உத்தரவை பிறப்பித்தார். அதாவது கல்லூரி, பள்ளிகள், கோயில்களுக்கு அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளை மூடுவோம் என தெரிவித்தார்.

717 கடைகளை மூடியதாகவும் அறிவித்தார். ஆனால் நாம் செய்த கள ஆய்வில் இன்னும் நூற்றுக்கணக்கான டாஸ்மாக் கடைகள் 100 மீட்டருக்குள் உள்ளது. இதையும் பேசுங்கள். இந்த அமைப்பு மூலம் ஒரு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதைவிட, ஆரோக்கி யமான வழியில் அதை வலியு றுத்தவேண்டும். ஆணவத்தோடு யார் அரசியல் செய்தாலும், அவர்களை தமிழ்நாடு மண் விடாது என்பதற்கு 2026 தேர்தல் சாட்சி. அதனால் நம் வேலையை செய்வோம். நமக்கு எந்த குழப்பமும் வேண்டாம். இது கண்டிப்பாக ஆரோக்கி யமான அரசியல் கட்சியாக மாறத்தான் போகிறது. 2031–ல் தமிழ்நாடு மக்கள் முன்நிறும் கட்சி நிற்கும். ஆரோக்கியமான அரசியலுக்காக நிற்போமேதவிர, அற்ப, அதிகார அரசியலுக்காக அல்ல. இன்னும் சிறப்பாக காட்டுவோம், சிறப்பாக கொடுப்போம் என்ற அரசி யலைத்தான் செய்வோம். அதற்கான வாய்ப்பை மக்கள் தருவார்கள்.

இந்த தவெக அரசு முடியும்போது தமிழ்நாட்டின் கடன் ரூ.15 கோடியாக இருக்கும். அதனை நாம்தான் தீர்க்கப் போகிறோம். '' என தெரிவித்தார்.

## KC Milk Siddique' குழுமத்தினர் மற்றும் 'Italian Kitchen' குழுமத்தினரின் திருமண விழா





ராமநாதபுரம், ஜூலை. 13–

இராமநாதபுரம் குமரையா கோயில் அருகே தனியார் மஹாலில் 'KC Milk Siddique' குழுமத்தினர் மற்றும் 'Italian Kitchen' குழுமத்தினரின் திருமண விழா வெகுவிமரி சையாக நடைபெற்றது.

இந்த திருமண விழாவில் ஏராளமான உறவினர்கள், நண்பர்கள், பொதுமக்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு, மணமக்க ளை நேரில் சந்தித்து தங்க ளது மனமார்ந்த திருமண நல்வாழ்த்துகளைத் தெரி வித்தனர். விழா முழுவதும் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறைந்த சூழல் நிலவியது.

அன்பு, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்த திருமண நிகழ்வு அனைவரின் பாராட்டையும் பெற்றது.

மணமக்களின் புதிய இல்லற வாழ்க்கை என்றும் இன்பம், அமைதி, ஆரோக்கியம், செல்வ வளம் மற்றும் நீண்ட ஆயுளுடன் சிறக்க வேண்டும் என்றும், அவர்களின் வாழ்க்கையில் எல்லா வளங்களும் பெருக கலந்துகொண்ட அனைவரும் வாழ்த்தி மகிழ்ந்தனர்.

## அமமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!



திருப்பூர், ஜூலை 13–

அம்மா மக்கள் முன்னேற்ற கழக திருப்பூர் மாநகர் மாவட்ட கழக சார்பு அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தலைமை அலுவலகத்தில் மாவட்ட அவை தலைவர் புல்லட் ரவி தலைமையிலும் மாநில சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் ஜான் முன்னிலையிலும் நடைபெற்றது இதில் மாநகர் மாவட்ட செயலாளர் இறை ஆர் வெங்கடேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி புதிதாக பொறுப்பேற்ற சார்பு அணி நிர்வாகிகள் அனைவருக்கும் பொன்னாடை போற்றி கௌரவித்து மேலும் நடைபெற உள்ள மாநகராட்சி தேர்தலில் சிறப்பாக களப்பணியாற்றி திருப்பூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் பதவியை வென்றெடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார் இந்த நிகழ்வில் இணை செயலாளர் கீதா ராணி. துணை செயலாளர் சுரேஷ் ராஜா.அம்மா பேரவை செயலாளர் பொக்லிஷம் ஆர் கே கார்த்திகேயன். தொழிற்சங்க செயலாளர் வின்னர் சதீஷ்குமார்.இளைஞர் அணி செயலாளர் தரணி சுரேந்தர் பொருளாளர் குமரவேல்.வழக்கறிஞர் பிரிவு செயலாளர் சதாகர். பொதுக்குழு உறுப்பினர் நாகேந்திர குமார். காந்திநகர் பகுதி செயலாளர் ஜெய் கணேஷ் ஐ டி விங் ஆனந்த கிருஷ்ணன்.பாபு.மகளிர் அணி கலாவதி.அனிதா பிந்து நாகேந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...

## வார தொடக்கத்தில் குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 13–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 குறைந்து ரூ.1,05,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 குறைந்து ரூ.13,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் எந்த மாற்றமும் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.240–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## ககன்யான் விண்கலத்தில் 3 புதிய சோதனைகள் வெற்றி!




புதுடெல்லி, ஜூலை. 13–

ககன்யான் விண்கலத்தின் 'குழு தொகுதி' (க்ரூவ் மாடுல்) அமைப்புகளுக்கான 3 முக்கிய சோதனைகள் வெற்றிகரமாக நடந்தது. இதில் முதல் சோதனையானது, விண்கலம் கடலில் விழுந்த பிறகு குழு தொகுதியை நேர் நிலையில் நிறுத்தி வைத்திருப்பதை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டது.

2–வது சோதனையானது, விண்வெளி வீரர்கள் தங்கும் 'குழு தொகுதி' மற்றும் மின்சாரம் மற்றும் உந்துவிசையை வழங்கும் 'சேவை தொகுதி' (சர்வீஸ் மாடுல்) ஆகியவற்றுக்கு இடையேயான இணைப்பாகச் செயல்படும் 'அம்பிலிக்கல்' பொறிமுறையின் பிரிப்புச் சோதனையாகும். இதுவும் வெற்றிகரமாக நடந்தது.

3–வது சோதனையானது. 'உச்சப் பகுதி உறை' (அபெக்ஸ் கவர்) பிரிப்பு நிகழ்வின்போது குழு தொகுதியின் கட்டமைப்பு உறுதித்தன்மையை உறுதிப்படுத்துவதாகும். அதுவும் வெற்றிகரமாக முடிந்ததாக இஸ்ரோ கூறி உள்ளது.

## டெல்லியில் மாநில நீர்வளத்துறை செயலாளர்களுக்கான தேசிய மாநாடு!



புதுடெல்லி, ஜூலை. 13–

மத்திய அரசின் ஜல் சக்தி அமைச்சகத்தின் சார்பில், மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் நீர்வளத் துறைகளின் மூத்த செயலாளர்களுக்கான அகில இந்திய மாநாடு (திங்கட்கிழமை) டெல்லியில் உள்ள சுஷ்மா சுவராஜ் பவனில் உள்ள சாணக்யா அரங்கில் நடைபெறுகிறது. மாநாட்டிற்கு , மத்திய ஜல் சக்தித்துறை மந்திரி சி.ஆர்.பாட்டீல் தலைமை தாங்குகிறார்.

நீர்வளத் துறையில் முன்னுரிமை அளிக்க வேண்டிய முன்முயற்சிகள், நீர்வள திட்டங்களில் மத்திய– மாநில ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல், ஜல் சக்தி அமைச்சகத்தின் முக்கிய தேசிய திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் நீர்வளத் துறை செயலாளர்கள், மத்திய ஜல் சக்தி அமைச்சக அதிகாரிகள், மத்திய நீர் ஆணைய அதிகாரிகள், தேசிய அணை பாதுகாப்பு ஆணைய அதிகாரிகள், உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

## பழனியில் 108 நாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி

பழனி ஜூலை 13–

பழனி நகராட்சி சார்பில், பழனி டவுன் பகுதியில் சுற்றி திரியும் தெரு நாய் களுக்கு ரேபிஸ் தடுப்பூசி போட முடிவு செய்யப்பட்டு இருந்தது. அதன்படி ஆணையர் பொறுப்பு பிரேட் ஆனந்த் மேற்பார்வையில், சுகாதார ஆய்வாளர் செந்தில் ராம்குமார் தலைமையில், சுகாதார ஆய்வாளர் சுரேஷ்கு மார் மற்றும் கால்நடை டாக்ட ர்கள் ஐந்து பேர் கொண்ட குழுவினர்கள்,

நகரில் சுற்றித்திரிந்த 108 தெருநாய்களுக்கு தடுப்பூசி செலுத்தினர். மேலும் தெரு நாய்களுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளதாக கூறினர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.


Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881




## தனிப்பட்ட வாழ்க்கை குறித்து பேசாதீர்கள்... ஹன்சிகா!



தன்னை குறித்த சமூக வலைதளங்களில் எழுந்த விமர்சனங்கள் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை குறித்த கருத்துகள் தொடர்பாக ஹன்சிகா மனம் திறந்து பேசியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், ''பொதுவாக பிரபலங்கள் என்றாலே, அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை யார் வேண்டுமானாலும் விமர்சிக்கலாம் என்ற எண்ணம் பலரிடம் இருக்கிறது. ஆனால் பிரபலங்களுக்கும் மனம் இருக்கிறது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கையில் கடினமான காலகட்டத்தை கடந்து செல்லும் போது, அவர்கள் எந்த மனநிலையில் இருப்பார்கள் என்பதையும் உணர வேண்டும்,'' என்று தெரிவித்தார்.

## பழனி மட நில பதிவு: அதிகாரி மீது நடவடிக்கை கோரிக்கை!

பழனி ஜூலை 13 –

பழனியில் இந்து தமிழர் கட்சித் தலைவர் ராமரவிக்குமார் நிருபர்களுக்கு கூறியதாவது:–

பழனி தண்டபாணி சுவாமி மடத்தின் நிலத்தை ஹைகோர்ட் வரை சென்று பழனி முருகன் கோயில் தேவஸ்தானம் கையகப்படுத்தியது. ஆனால் தற்பொழுது அந்த நிலம் தனியாருக்கு கிரயம் செய்து பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. கோயில் நிர்வாகம் சார்பாக அந்த நிலத்தை பத்திரப்பதிவு செய்யக்கூடாது எனக் கூறியும், அந்த நிலம் பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மோசடியாக பதிவு செய்த அந்த பத்திரப்பதிவு அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் கூறிலும் கோவிலுக்கு சொந்தமான சுமார் 3000 ஏக்கர் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு பட்டா வழங்கிருப்பதாக கூறப்படுகிறது. இது கண்டிக்கத்தக்கது இவ்வாறு அவர் கூறினார்.

## தட்டச்சு பயிலக அங்கீகாரம் புதுப்பிக்க ஜூலை 19 கடைசி நாள்!




சென்னை, ஜூலை. 13–

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து உள்ளிட்ட தொழிற்பயிற்சிகளை நடத்தி வரும் நிரந்தர மற்றும் தற்காலிக அங்கீகாரம் பெற்ற அனைத்து வணிக வியல் பயிலகங்களும், தங்களது ஆண்டு அங்கீகாரத்தை ஜூலை 19–ஆம் தேதிக்குள் கட்டாயம் புதுப்பிக்க வேண்டும் என்று தொழில்நுட்பக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கல்வி கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்) ஏ. ராஜேந்திரன் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், பயிலகங்கள் TIMS இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பக் கட்டணம் ரூ.30 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், நிரந்தர அங்கீகாரம் பெற்ற பயிலகங்களுக்கு புதுப்பிப்பு கட்டணம் ரூ.250, தற்காலிக அங்கீகாரம் பெற்ற பயிலகங்களுக்கு ரூ.750 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.



# இன்றைய கார்ட்டூன்

## டிரம்ப் சொன்னது நடந்துவிட்டது..!!
## ஈரானின் பழிக்கு பழி பட்டியலில்
## முதலிடத்தில் டிரம்ப் பெயர்..!!




# வாக்காளர் பட்டியலில் பெயர்: புதிய விதிகள்!

புதுடெல்லி, ஜூலை. 13–

வாக்காளர் பட்டியலில் புதிதாகப் பெயரை சேர்க்க விரும்பும் இளைஞர்களுக்கான விண்ணப்பப் படிவத்தில், இந்திய தேர்தல் ஆணையம் புதிய விதிமுறைகளை சேர்த்திருக்கிறது.




தற்போது, 18 வயது பூர்த்தியடைந்தவர்கள், தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் படிவம் 6–ஐப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கும்போது, அவர்களது பெற்றோரின் சிறப்பு தீவிர திருத்தப் பட்டியல் விவரங்களையும் இணைத்து வழங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், ஒருவர் பல முறை விண்ணப்பிப்பது, போலியான பதிவுகள் தடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது, தேர்தல் ஆணையத்தின் படிவம் 6–ல், ஒரு புதிய பிரகடனப் பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இதனால், ஆன்லைன் மூலம் இளம் வாக்காளர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க விண்ணப்பிக்கும்போது, பெற்றோரின் எஸ்ஐஆர் விவரங்களை அல்லது அதில் கேட்கப்படும் வாக்காளர் அடையாள அட்டை எண், பகுதி எண் உள்ளிட்டவற்றை முழுமையாக பதிவு செய்ய வேண்டும். இதனை முழுமையாக பதிவு செய்யாவிட்டால், படிவம் 6–ஐ சமர்ப்பிக்க முடியாது என்று தெரிவித்துள்ளனர். அதன்படி, எஸ்ஐஆர் திருத்தத்துக்குப் பிறகு வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில், பெற்றோரின் பெயர்கள் இருந்தால்,

பெற்றோரின் பெயர்

பெற்றோரின் சட்டப்பேரவை தொகுதி எண்

பெற்றோர் வாக்களிக்கும் வாக்குச்சாவடி விவரம்

வாக்குச்சாவடியின் பகுதி எண்

உள்ளிட்ட விவரங்களை சரியாக பூர்த்தி செய்ய வேண்டும். இந்த படிவத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் புதிய விவரங்கள் மூலம், ஒருவர், பல முறை விண்ணபிப்பதும், தவறான முகவரிகளில் விண்ணப்பிப்பதும் தவிர்க்கப்படும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள்.

எனவே, இளைஞர்கள் இது குறித்து அறிந்துகொண்டு, படிவம் 6–ஐ பூர்த்தி செய்வதற்கு முன்பு தங்களது பெற்றோர்களின் விவரங்களையும் முன்கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# வீடு டூ பள்ளி! மாணவர்களுக்காக சிறப்பு பேருந்துகள்!

சென்னை, ஜூலை. 13–

பள்ளி மாணவர்கள் கூட்ட நெரிசலின்றி, பாதுகாப்பான பயணம் மேற்கொள்ள வசதியாக சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் சார்பில் 42 சிறப்பு பேருந்துகள் சேவை தொடங்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டை சட்டப்பேரவை உறுப்பினர் அருள் பிரகாசம், சைதாப்பேட்டை தொகுதியில் உள்ள 2 அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு பேருந்து வசதி வேண்டி கடந்த ஜூன் 30 ஆம் தேதி போக்குவரத்துத் துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்திருந்தார்.



இதுதொடர்பாக கடந்த 10 நாள்களாக சைதாப்பேட்டை மற்றும் பல்வேறு பகுதிகளில், பள்ளிகள் அமைந்துள்ள இடங்களில் மாநகர் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டனர்.

அப்பகுதிகளைச் சார்ந்த மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்களின் அடிப்படையில் அறிக்கை தயார் செய்யப்பட்டு, முதல்வர் ஜோசப் விஜய்யிடம் அளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின்படி, முதல்வர் ஜோசப் விஜய்யின் உத்தரவின்படி, பள்ளி மாணவர்கள் கூட்ட நெரிசலின்றி. பாதுகாப்பான பயணம் மேற்கொள்ள வசதியாக, மாணவர்களை அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தங்களிலிருந்து பள்ளிக்கும். பள்ளியிலிருந்து அவர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்தங்களுக்கும் காலை மற்றும் மாலை நேரங்களில் அழைத்து சென்றுவர ஏதுவாக, ஏற்கனவே சென்னையில் உள்ள 25 பள்ளிகளுக்கு 25 பேருந்துகள் மூலம் 50 பயண நடைகள் இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் நாளொன்றுக்கு 41 சிறப்பு பேருந்துகள் வாயிலாக 84 பயண நடைகள் ஜூலை. 13 முதல் தொடங்கப்பட்டுள்ளன.

# சிஎஸ்கே பயிற்சியாளர் பதவியில் இருந்து ஸ்டீபன் பிளெமிங் விலகல்!

சென்னை, ஜூலை. 13–

கடந்த 17 ஆண்டுகளாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமை பியற்சியாளராக இருந்த ஸ்டீபன் பிளெமிங் தனது பொறுப்பில் இருந்து விலகியுள்ளார். அவரின் பங்களிப்பிற்கு நன்றியும், பாராட்டும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.



2008ம் ஆண்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இணைந்த ஸ்டீபன் பிளெமிங் 2009 முதல் தலைமை பயற்சியாளராக இருந்து வந்த நிலையில் விலகியுள்ளார். கடந்த 2023ம் ஆண்டுக்கு பிறகு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கோப்பை வெல்லாமல் திணறி வரும் நிலையில் ஸ்டீபன் பிளெமிங்க விலகியுள்ளார்.

# பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை!




சென்னை, ஜூலை. 13–

சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜய் பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜய் கடந்த ஒரு வார காலமாக தினமும் ஒவ்வொரு துறையாக ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

சட்டசபையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட இருப்பதையொட்டி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் விரிவாக ஆலோசனை மேற்கொண்டார். அந்த வகையில் பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன், நிதித்துறை அமைச்சர் மரிய வில்சன், நிதித்துறை செயலாளர் சித்திக், பள்ளிக்கல்வித்துறை செயலாளர் சந்திரமோகன், பள்ளிக்கல்வித்துறை இயக்குனர்கள் பங்கேற்றனர்.

தமிழகத்தில் அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு டெட் தேர்வு கட்டாயம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ள நிலையில் தமிழகத்தில் டெட் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று பணியில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் டெட் தேர்வு எழுதாமல் பணியில் உள்ள ஆசிரியர்கள் தகவல்களையும் முதலமைச்சரிடம் பள்ளிக்கல்வித்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அரசு பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை செயற்கை நுண்ணறிவு மற்றும் காலநிலை அறிவியல் பாடங்களை கொண்டு வருவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

2031–ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் அனைத்து பள்ளி வகுப்பறைகளும் ஸ்மார்ட் கிளாஸ் அறைகளாக மாற்றப்படுவது குறித்தும், விவாதிக்கப்பட்டது.

அரசு பள்ளி ஆசிரியர்களின் தகுதியை மேம்படுத்தும் விதமாக தேர்வு செய்யப்படும் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆண்டும் பள்ளிக்கல்வியில் சிறந்து விளங்கும் சிங்கப்பூர் மற்றும் பின்லாந்து நாடுகளில் பயிற்சி பெரும் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

அரசு பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது குறித்தும், அரசு பள்ளி ஆசிரியர்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை திறன் பட கற்றுக்கொள்ள ஏதுவாக செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் கல்வி திறன் மேம்படுத்தும் திட்டம் பற்றி ஆலோசனை மேற்கொண்டதாக தெரிகிறது.

பட்ஜெட்டில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக என்னென்ன புதிய அறிவிப்புகளை இடம்பெறச் செய்யலாம் என்பது பற்றியும் முதலமைச்சர் விஜய் ஆலோசனை மேற்கொண்டார்.

# கரிசல் நிலத்தின் மூத்த எழுத்தாளர் பூமணி- மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூலை. 13–

தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கரிசல் நிலத்தின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவரான பூமணி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு வேதனையடைந்தேன். கரிசல்காட்டு மக்களின் வாழ்க்கையையும் சமூகத்தில் நிலவிய கட்டமைப்புகளையும் மிக எளிமையான மொழியில் வெளிப்படுத்திய படைப்பாளராகத் பூமணி அவர்கள் திகழ்ந்தார். தமிழின் எந்த அகராதியிலும் பதிவாகாத பல வட்டார வழக்குச் சொற்கள் அவரது படைப்புகள் மூலமாக ஆவணப்படுத்தப்பட்டன. பூமணி அவர்களுக்கு சாகித்ய அகாடமி விருதினைப் பெற்றுத் தந்த ‘அஞ்ஞாடி’ எனும் புதினத்தின் தலைப்பும் கூட அத்தகையதே.

எழுத்தாளராக மட்டுமின்றி, கருவேலம்பூக்கள் எனும் திரைப்படத்தையும் எழுதி இயக்கித் தமிழ்நாடு அரசின் விருதினைப் பெற்றிருக்கிறார். அவரது வெக்கை நாவல் அசுரன் திரைப்படமாக மாறியபோது, மேலும் பல இளம் வாசகர்களும் பூமணியின் எழுத்துகளைப் படிக்கத் தொடங்கினர்.

அவரது எழுத்துப் பணிகளைப் போற்றும் வகையில், திராவிட மாடல் ஆட்சியில் 2022–ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் பூமணி அவர்களுக்குக் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணையை வழங்கி மகிழ்ந்ததையும் நினைவு கூர்கிறேன்.

இயல்பான நடையில் வீரியமான படைப்புகளைத் தந்து தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பங்காற்றிய பூமணி அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இலக்கிய ஆர்வலர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

# 2015-ஆம் ஆண்டுக்குப் பின்.. மிக வெப்பமான ஜூலை மாதம்!



சென்னை, ஜூலை. 13–

தமிழ்நாட்டில், வழக்கமான ஜூன் மாதம் பருவமழை தொடங்கியதும், வெய்யில் தன்னுடைய வெப்பத்தைக் குறைத்துக் கொள்ள ஆரம்பிக்கும். ஆனால், இந்த ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களும் வெய்யில் காலமாகவே மாறிவிட்டது.

இந்த நிலையில்தான், வானிலை நிலவரங்களை கணித்து மக்களுக்கு புரியும் வகையில் எளிமையாக எடுத்துச் சொல்லி வரும் தமிழ்நாடு வெதர்மேன் என அறியப்படும் பிரதீப் ஜான், தன்னுடைய சமூக வலைத்தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை, திருச்சி, கடலூர், நாகை, தஞ்சாவூர், பெரம்பலூர், மதுரை, சிவகங்கை, தூத்துக்குடி, விருதுநகர், நெல்லை மற்றும் புதுச்சேரி ஆகிய மாவட்டங்களில் 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு மிக வெப்பமாக காணப்படும் ஜூலை இதுதான் என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கேற்ப, ஜூலை மாதத்தில் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெப்பம் புதிய சாதனைகளைப் படைத்து வருகிறது. எப்போதுமே வெய்யில் அதிகம் வாட்டும் வேலூரில் வெய்யில் சதமடிக்கத் தொடங்கியிருக்கும் ஜூலை மாதத்தில், குளுகுளுவென இருக்கும் ஊட்டி, கொடைக்கானல் பகுதிகளிலும் பகல் வேளையில் வெய்யில் சுட்டெரிப்பதாகக் கூறப்படுகிறது. அது மட்டுமல்ல, வரும் நாள்களில் சென்னையில் வெய்யில் 40 டிகிரியைத் தாண்டும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

# எழுத்தாளர் பூமணி மறைவுக்கு முதலமைச்சர் விஜய் இரங்கல்... ‘அரசு மரியாதையுடன் பூமணிக்கு இறுதிச் சடங்கு’ என அறிவிப்பு!





சென்னை, ஜூலை. 13–

தமிழ் இலக்கிய உலகின் முன்னணி எழுத்தாளரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான பூமணி (79) உடல்நலக்குறைவு காரணமாக காலமானார். அவரது மறைவுக்கு எழுத்தாளர்கள், வாசகர்கள் மற்றும் திரையுலகினர் தங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், பூமணி மறைவுக்கு முதலமைச்சர் விஜய் இரங்கல் தெரிவித்து வெளியிட்டுள்ள பதிவில்,

சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளரும், தமிழ் இலக்கிய உலகின் குறிப்பிடத்தக்க படைப்பாளருமான பூலித்துரை மாணிக்கவாசகம் எனும் பூமணி அவர்கள் காலமானார் என்ற செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது.

பூமணி அவர்கள் கரிசல் நிலத்தின் மண் வாசனையும், அடித்தட்டு மக்களின் வாழ்வின் நுட்பமான யதார்த்தங்களும், வரலாற்றின் ஆழமான சாட்சியங்களும் நிரம்பிய படைப்புகளின் மூலம் தமிழ் இலக்கியத்தை செழுமைப்படுத்திய முக்கியமான படைப்பாளி ஆவார்.

அவரது ‘அஞ்ஞாடி’ நாவலுக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றது, அவரது இலக்கிய ஆளுமைக்கு கிடைத்த உயரிய அங்கீகாரமாகும். மேலும், அவரது ‘வெக்கை’ நாவலை அடிப்படையாகக் கொண்டு உருவான ‘அசுரன்’ திரைப்படம், அவரது எழுத்தின் வீச்சை உலகறியச் செய்தது.

பூமணி அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தமிழ் இலக்கிய உலகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலக்கியத் துறையில் பூமணி அவர்களின் பங்களிப்பைப் போற்றி அஞ்சலி செலுத்தும் வகையில், அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

# அரசு மரியாதையுடன் பின்னணி பாடகி எஸ்.ஜானகி உடல் தகனம்!





மைசூரு, ஜூலை. 13–

மைசூரு அருகே உள்ள பண்ணை தோட்டத்தில், 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன், பிரபல பின்னணி பாடகி எஸ்.ஜானகியின் உடல் தகனம் செய்யப்பட்டது. அவரது உடலுக்கு பேத்தி அப்சரா தீ மூட்டி இறுதி சடங்குகள் செய்தார்.

பண்ணை வீட்டை உடல் அடைந்ததும், தெலுங்கு பிராமண முறைப்படி உடலுக்கு, இறுதி சடங்குகள் நடத்தப்பட்டன. ஜானகியின் பேத்தி அப்சரா, மருமகள் உமா முரளி கிருஷ்ணா முன் நின்று சடங்குகளை நடத்தினர். ஜானகியின் உடல் அரசு முறைப்படி தகனம் செய்யப்படும் என்று, கர்நாடக முதல்வர் சிவகுமார் அறிவித்து இருந்தார்.

அதன்படி, 10 போலீசார், 3 ரவுண்டு துப்பாக்கியால் சுட்டனர். அதாவது, 30 துப்பாக்கி குண்டுகள் முழங்கப்பட்டன. பின், ஜானகியின் உடல் தகனம் செய்யப்பட்டது. அவரது மகன் முரளி கிருஷ்ணா இறந்துவிட்டதால், பேத்தி அப்சரா, ஜானகியின் உடலுக்கு தீ மூட்டினார்.

அப்போது, ‘ஜானகியின் புகழ் அழியாமல் இருக்கட்டும்’ என்று ரசிகர்களும், பொதுமக்களும் கோஷம் எழுப்பினர்.

தியான மண்டபம் நவீனின் பண்ணை வீடு என்றால் ஜானகிக்கு ரொம்ப பிடிக்குமாம். தான் இறந்த பின், உடலை இங்கு தான் தகனம் செய்ய வேண்டும் என்று, குடும்பத்தினரிடம் பல முறை ஆசையை வெளிப்படுத்திள்ளார். அதை நிறைவேற்றும் வகையில் அவரது உடல், பண்ணை வீட்டின் நிலத்திலேயே தகனம் செய்யப்பட்டுள்ளது.

மைசூரில் ஜானகி பெயரில் நினைவகம் அல்லது தியான மண்டபம் அமைக்க வேண்டும் என்று, பிரபல இசை அமைப்பாளர் ஹம்சலேகா உள்ளிட்ட திரையுலகினர் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். முதல்வரிடம் பேசி முடிவு செய்வதாக, அமைச்சர் யதீந்திரா கூறி யுள்ளார்.

# ஆல்கஹால் மருந்துகளுக்கு புதிய கட்டுப்பாடு!

சென்னை, ஜூலை. 13–

அதிகமான ஆல்கஹால் கலந்துள்ள மருந்துகள் விற்பனைக்கு கட்டுப்பாடுகள் விதித்து, மத்திய அரசு அறிவித்துள்ளது.



மத்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு, ‘ஷெட்யூல் கே’ எனும் பிரிவின் கீழ், 12 சதவீத ஆல்கஹால் கொண்ட மருந்துகளை, தளர்வுகளுடன் விற்பனை செய்ய அனுமதி அளிந்திருந்தது. இருமல், சளி உள்ளிட்ட பல பாதிப்புகளுக்கு, அதிக, ‘எத்தில் ஆல்கஹால்’ பயன்படுத்தி, மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

ஆல்கஹால் கலந்த மருந்து தயாரிப்பு விதிகளை கடுமையாக்கியது அரசு; போதை பயன்பாட்டை தடுக்க நடவடிக்கை ஆல்கஹால் கலந்த மருந்து தயாரிப்பு விதிகளை கடுமையாக்கியது அரசு; போதை பயன்பாட்டை தடுக்க நடவடிக்கை

இந்த மருந்துகள், போதைக்காக பயன்படுத்தப்படுவதாக, மத்திய மருந்து கட்டுப்பாடு அமைப்பின் கவனத்துக்கு சென்றது. அதன்படி, மருந்துகளில் ஆல்கஹால் பயன்பாட்டையும், அதன் விற்பனையில் கட்டுப்பாடு களையும் விதிக்க, மத்திய அரசு முடிவு செய்தது.

அதன்படி, 12 சதவீதத்துக்கும் மேல் ஆல்கஹால் கலந்த மருந்துகளை, தன்னிச்சையாக வாங்கவோ, விற்கவோ முடியாது எனும் வகையில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரின் பரிந்துரைச் சீட்டு இல்லாமல், அந்த மருந்துகளை விற்பனை செய்ய முடியாது. இந்த புதிய விதிகள், 2027 ஜனவரி முதல் அமலுக்கு வருகின்றன.

இந்த புதிய கட்டுப்பாடுகள் வழியாக, இத்தகைய மருந்துகள் விற்பனை முற்றிலும் தடுக்கப்படும் என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# சென்னையில் தரையிறங்கிய விமானம் மீது பறவை மோதியது!

சென்னை, ஜூலை. 13–

லண்டனிலிருந்து சென்னை வந்த பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானத்தின் மீது பறவை மோதியது.

பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்தைச் சேர்ந்த விமானம், இன்று அதிகாலை லண்டனிலிருந்து சென்னைக்கு வந்துள்ளது. இந்த விமானம் தரையிறங்கும்போது விமானத்தின் முன்பகுதியில் பறவை மோதியுள்ளது.

இதனிடையே, எவ்வித பாதிப்புமின்றி விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டு, பயணிகள் வெளியேற்றப்பட்டனர்.

தொடர்ந்து, விமானத்தில் பறவை மோதிய பகுதியில் தொழில்நுட்பக் குழுவினர் இரண்டு மணிநேரத்துக்கு மேலாக ஆய்வு மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து, மீண்டும் லண்டன் புறப்படவிருந்த அந்த விமானத்தின் சேவை ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, அந்த விமானத்தில் புறப்படவிருந்த 202 பயணிகள் ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

முழு ஆய்வுக்குப் பிறகு, பயணிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட பின்னரே விமானம் இயக்கப்படும் என்று பிரிட்டிஷ் ஏர்வேஸ் தெரிவித்துள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020